# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.411/2022 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுந்தரம் | த–பெ | சாத்தையா |
| ஊர்: | : | கண்ணுத்தோப்பு | | |
| வயது: | : | 36/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | டூவிலர் ஓர்க் ஷாப் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.11.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கண்ணுத்தோப்பில் வசித்து டூவிலர் ஓர்க் ஷாபில் வேலை செய்து வருகிறேன். கடந்த 14.11.2015 அன்று நான் 4.00 மணியளவில் ரயில்வே கேட் வழியாக சென்று கொண்டிருந்தபோது நபர் ஒருவரை பிடித்து போலீசார் விசாரணை செய்தபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு திருடிய பொருட்களை குறித்த விவரங்களை சொன்னார். அதை வாக்குமூலமாக போலீசார் பதிவு செய்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். மேலும் தேவக்கோட்டைக்கு போலீசார் அழைத்து சென்றார்கள். அங்கு முறிந்த நிலையில் வாழை கட்டை அருகே தங்க செயின் ஒன்றை போலீசார் கைப்பற்றினார்கள். மேற்படி ஆவணத்திலும் சாட்சி கையொப்பம் செய்தேன். மேற்படி ஆவணங்களில் உள்ள **கையொங்கள் அசாஆ 3 முதல் அசாஆ 5** வரை குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

1) இரயில்வே கேட்டிற்கு எந்த பக்கம் நின்று போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் வடபுறம். எத்தனை போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் இரண்டு போலீசார் விசாரணை செய்தார்கள். யார் யார் என்றால் யார் என்று தெரியாது. நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கையெழுத்திட்ட ஆவணத்தை பேனாவால் அந்த இடத்திலேயே எழுதியிருந்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். மொத்தம் எத்தனை பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் இரண்டு பேப்பரில் கையொப்பம் செய்தேன். தேவக்கோட்டையில் எந்த இடத்திற்கு சென்றேன் என்றால் இரவில் பெயர் முகவரி தெரியாத நபர் ஒருவர் அழைத்து சென்றார். செயினை கைப்பற்றிய இடத்தின் நான்கு மால் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இடத்தில் எத்தனை பேர் இருந்தோம் என்றால் இரண்டு போலீசார் இருந்தார்கள். அவர்கள் என்ன பதவி என்று தெரியாது.

2) இந்த வழக்கில் புகார்அளித்தது யார் என்றால் சரவணன். கையெழுத்துகள் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரியல்ல. புகார்தராரும் நானும் கடை வைத்திருக்கிறோம்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.11.19 14:06:30 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.411/2022 P.W.5**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கண்ணன் | த–பெ | செல்லையா |
| ஊர்: | : | பெரியக்கோட்டை | | |
| வயது: | : | 42/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலிவேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.11.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

--------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் பெரியக்கோட்டையில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 28.10 வருடம் நினைவில் இல்லை ஒரு நாள் நான் எனது நண்பர் ஹரிகரன் என்பவருடன் நின்று பேசிக்கொண்டிருந்தபோது சாக்கோட்டை போலீசார் அங்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டுவிசாரணை செய்து ஒரு ஆவணம் தயார் செய்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **கையொப்பம் அசாஆ 2**. மற்றபடி வழக்கு குறித்து எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 26.10.2015 அன்று 12.00 மணிக்கு பனம்பட்டி கடையில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது குற்ற எண்.363/2015 என்ற வழக்கு குறித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு அங்கு அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் ஆவணத்தில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.11.19 14:06:36 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.